**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 349/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | சந்திரன் |
| Father's Name/Husband Name: | ஆறுமுகம் |
| Village : | அத்தியூர் |
| Taluk : | குன்னம் |
| Age : | 49 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 26.05.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 3 ஆஜர் . எதிரிகள் 1, 2, 4 ஆஜர் இல்லை, அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கட்டிட வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய உறவினர். 2016ம் வருடம் இறப்பிற்காக வெளியூர் சென்று விட்டு வாகனத்தில் முருகேசன், வடிவுக்கரசி மற்றும் சிலர் வந்துள்ளார்கள். வாகனத்தில் வரும்போது எதிரி முருகேசன் தகாத வார்த்தைகளால் அ.சா.1 ஐ திட்டிக் கொண்டே வந்துள்ளார். பிறகு வண்டியிலிருந்து இறங்கியதும் அ.சா.1ஐ முருகேசன் அவருடைய மகன் முகிலன் அடிக்க ஆரம்பித்து விட்டார்கள். சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன்.

சண்டையை தடுக்க வந்த அ.சா.1ன் தம்பி திருமுருகன் என்பவரை எதிரி முருகேசன் அவர் கையில் அணிந்திருந்த மோதிரத்தால் அவருடைய கண் புருவத்தின் கீழ் குத்தினார். மேலும் ஆத்திரம் தீராமல் எதிரிகள் முருகேசன், வளர்மதி, முகிலன் மற்றும் எதிரி முருகேசனின் மகள் கல்லால் திருமுருகனை அடிக்க

ஆரம்பித்துவிட்டார்கள். எங்களால் தடுக்க முடியவில்லை. பிறகு காயம் பட்டவர்கள் மருத்துவமனை சென்றுவிட்டார்கள். எதிரி முகிலன் ஆஜரில் உள்ளார். மற்ற எதிரிகளை அடையாளம் பார்த்தால் தெரியும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 வடிவுக்கரசி எனது மனைவியின் அக்கா என்றால் சரிதான். ப.சா.2 திருமுருகன் அ.சா.1ன் தம்பி என்றால் சரிதான். ப.சா.2 தினேஷ்குமார் அ.சா.1ன் மகன் என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் யார் வீட்டில் கொத்தனார் வேலை செய்து கொண்டிருந்தேன் என்றால் அ.சா.1 வடிவுக்கரசியின் வீட்டில். என்னுடன் கொத்தனார் பழனிவேலும், சித்தாள் அபிராமியும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். வழக்கு சம்பவம் குறித்து அவர்களுக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எனது முதல் நிலை சாட்சியத்தில் கூறியது போல் ப.சா.2ம் மருத்துவரிடம் எதிரி மோதிரத்தால் தாக்கியதாக நானும் ப.சா.2 திருமுருகனும் சொல்லியுள்ளோமா என்றால் ஆமாம். அ.சா.1 இறப்புக் காரியத்திற்கு டாட்டா ஏ.சி வாகனத்தில் சென்று வரும்போது எதிரி முருகேசன் தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார் என்பதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அ.சா.1 வடிவுக்கரசி என்பவர் எதிரி முருகேசனின் தம்பி தமிழனின் மனைவி ஆவார் என்றால் சரிதான். எதிரி முருகேசனின் தம்பி தமிழன் இறந்தபிறகு அ.சா.1 வடிவுக்கரசி பாலசுப்பிரமணியன் என்பவரை இரண்டாம் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். அ.சா.1 வடிவுக்கரசிக்கும் எதிரி முருகேசனுக்கும் சொத்து சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகள் திருமுருகனையும், வடிவுக்கரசியையும் தாக்கவில்லை என்றாலும், அ.சா.1 வடிவுக்கரசி சொத்து கிடைக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்து அதன் பேரில் வழக்கு பதிவு செய்து அ.சா.1வடிவுக்கரிசிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.